# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

### 2022–ம் ஆண்டு பிலவ வருடம் பங்குனி மாதம் 2–ம் தேதி மார்ச் 16.03.2022 புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட பொருள் விபரம்

### நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பொருள்:

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:1** | தமிழகத்தில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அதிக பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று நகர்ப்புற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் பதவி பிரமாணம் செய்து கொண்டார்கள். இதற்கு உறுதுணையாகவும், உள்ளாட்சியில் நல்லாட்சி பெறவேண்டும் என்று அரும்பாடு பட்ட தளபதியார் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு.திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். | **தீர்மான எண்:–** 209<br>**தீர்மானம்:–** இன் நகர்மன்றத்தின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |
| **பொருள் எண்:2** | தமிழுக்கு பெறுமை சேர்க்கும் செம்மொழி கண்ட முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் செயல்திட்டமான தமிழ் வாழ்க என்ற பெயர் பலகை நமது நகராட்சியில் வைத்து கொள்ள நகர்மன்ற கூட்டத்தில் தீர்மான நிறைவேற்றுவது தொடர்பாக. | **தீர்மான எண்:– 210**<br>**தீர்மானம்:–** தீர்மானம் நிறைவேற்றபட்டது |
| **பொருள் எண்:3** | அறந்தாங்கி பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகள் மற்றும் அனைத்து கட்டமைப்பு பணிகள் செய்து தர தேவையான நிதிகளை அரசிடமிருந்து முழு மான்யமாக பெற்று அறந்தாங்கி நகராட்சியினை முன்மாதிரி நகராட்சியாக மாற்றி அமைத்திட தளபதியார் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை கேட்டுக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாக. | **தீர்மான எண்:– 211**<br>**தீர்மானம்:–** தீர்மானம் நிறைவேற்றபட்டது. |

**<u>பொருள் எண்: 4</u>**

கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-2022 கீழ் நீர் நிலைகள் மேம்பாட்டு செய்ய இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குளங்களின் மேம்பாடு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கருத்துரு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சூரியமூர்த்தி குளம் மேம்பாடு செய்தல் | 1 | 105.00 |
| 2 | பாப்பான் குளம் மேம்பாடு செய்தல் | 1 | 63.00 |
| | கூடுதல் | | 168.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் 0960/இ1/2022
2. மேற்படி தொகையினை முழு மான்யமாக பெற்றிட அரசிடம் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

**<u>தீர்மான எண்:– 212</u>**

**<u>தீர்மானம்:–</u>** <u>அலுவலக குறிப்பு: 1,2, அனுமதிக்கப்பட்டது.</u>

ஒம்/–இரா.ஆனந்த்
தலைவர்,
அறந்தாங்கி நகர்மன்றம்.